சுருக்கம்

தணிக்கை – உள்ளாட்சி நிதித் தணிக்கை – நகராட்சிகள் மற்றும் (சென்னை தவிர) ஏனைய ஐந்து மாநகராட்சிகள் – நீண்டகால நிலுவைத் தணிக்கைத் தடையை நிவர்த்தி செய்ய மாநில மற்றும் மாவட்ட அளவிலான இரு உயர்மட்டக்குழுக்களை திருத்தியமைத்தல் – அக்குழுக்களின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் வரையறுத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநிர் வழங்கல் (நநி5)துறை

அரசாணை (நிலை) எண். 65 நாள். 22/5/2007

மீண்டும் படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை)எண் 93 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநிர் வழங்கல் (நநி5)துறை நாள் 16.7.1992

மேலும் படிக்கப்பட்டது

1. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கடிதம் ந.க.எண்.இஅஅ1/20379/2002 நாள் 5.9.2002
2, நகராட்சி நிர்வாக ஆணையர் நேர்முகக் கடிதம் எண்.44966/2001/L4 நாள். 8.6.2005
3. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் கடிதம் எண்.50730/இஅஅ/2004 நாள் 14.7.2005 மற்றும் நேர்முகக் கடிதம் எண் 1606/க்யூஎல்ஆர்/2006 நாள். 15.11.2006

*****

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் நகராட்சிகளில் நீண்டகால தணிக்கைத் தடைகளை நிவர்த்தி செய்ய மாவட்ட அளவில் ஒரு உயர்மட்டக்குழுவும், மாநில அளவில் ஒரு உயர்மட்டக்குழுவும் அமைத்து நிலுவைத் தணிக்கை தடைகள் தீர்வுகாண கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து அரசு ஆணையிட்டது:–

I. மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு:–

| | |
|---|---|
| 1.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் | தலைவர் |
| 2.உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை மண்டல துணை இயக்குநர் | துணைத்தலைவர் |
| 3.மண்டல செயற்பொறியாளர் | உறுப்பினர் |
| 4.நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் இருந்து ஒரு அலுவலர் (துணை இயக்குநர் பதவிக்கு குறையாமல்) | உறுப்பினர் |
| 5.சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் | செயலாளர் மற்றும் |

குழு கூட்டுபவர்

**II.** மாநில அளவிலான உயர்மட்டக்குழு:

| | | |
|---|---|---|
| 1. நகராட்சி நிர்வாக ஆணையர் | – | தலைவர் |
| 2.உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் | – | உப தலைவர் |
| 3.நிதி ஆலோசகர் (நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம்) | – | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |
| 4.நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கண்காணிப்புப் பொறியாளர் | – | உறுப்பினர் |
| 5.கணக்கு அலுவலர் (தணிக்கைப்பிரிவு) நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | – | உறுப்பினர் |

ஆனால் மேலே குறிப்பிடப்பட்ட குழுக்களின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் வரையறை செய்யப்படவில்லை.

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களிலுள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் பரிந்துரை மற்றும் அதன் மீதான நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துரு ஆகியவற்றினை அரசு கவனமாக ஆய்வுசெய்து, அதன் அடிப்படையில் மாநில அளவிலான மற்றும் மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழுக்களை பின்வருமாறு திருத்தியமைத்து, அக்குழுக்களின் பணிகள் மற்றம் அதிகாரங்கள் வரையறை செய்து அரசு ஆணையிடுகிறது.

**I.** மாநில அளவிலான உயர்மட்டக்குழு:

| | | |
|---|---|---|
| i) நகராட்சி நிர்வாக ஆணையர் | – | தலைவர் |
| ii)உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் | – | உப தலைவர் |
| iii).அந்தந்த மாநகராட்சி ஆணையர்/ நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் | – | உறுப்பினர் |
| iv).நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக மேற்பார்வைப் பொறியாளர் | – | உறுப்பினர் |
| v). நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகர் | – | உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர் |

**II.** மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு:

i) திருப்பூர் மண்டலம்–கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர்
தஞ்சாவூர் மண்டலம் – திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர்
மீதமுள்ள 5 மண்டலங்களுக்கும் நகராட்சி நிர்வாக ஆணையர்
அலுவலக நிதி ஆலோசகர் – தலைவர்

(மாநகராட்சி ஆணையர் தலைவராக இருக்கும் பட்சத்தில் உறுப்பினராகவும் / மாநகராட்சி ஆணையர் இ.ஆ.ப. அல்லாத அலுவலராக இருக்கும் பட்சத்தில் தலைவராகவும் நிதி ஆலோசகர் செயல்படுவார்)

ii)மண்டல துணை இயக்குநர்
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை – துணைத் தலைவர்

iii).மண்டல நிர்வாக பொறியாளர் – உறுப்பினர்

iv).அந்தந்த நகராட்சிகளின் ஆணையர்கள் – உறுப்பினர்

v). நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் – உறுப்பினர் மற்றும் குழு கூட்டுபவர்

மாநில அளவிலான உயர்மட்டக்குழுவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்:

- மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவின் செயல்பாடுகளை கண்காணித்தல். மாநில அளவில் அமையும் குழு தேவைக்கேற்பவும் குறைந்தது வருடத்தில் இரண்டு கூட்டமாவது கூட்டி மாவட்ட அளவிலான குழுவின் பணியினை மேற்பார்வையிட வேண்டும்.

- மாவட்ட அளவிலான குழுக்களால் தீர்க்க இயலாத தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்யவும் அதற்கான அதிகாரங்களை வரையறை செய்தல்

- சென்னை தவிர பிற மாநகராட்சிகளின் தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்தல்.

- உயர்மட்டக்குழுக்களில் உறுப்பினராக உள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் தொடர்பான தணிக்கைத் தடை விவாதப் பொருளை, பொருள் நிரலில் இடம் பெறுமாயின் அதன்பேரில் அந்த உறுப்பினர் தன்னிலை விளக்கம் அளிக்கலாம் எனவும் அதனைத் தவிர்த்து தணிக்கைத் தடையை நீக்குவது போன்ற எந்த ஒரு கருத்தும் தெரிவிக்கக்கூடாது எனவும், கூட்டத்தில் கலந்து கொள்ளும் தலைவர் உட்பட இதர உறுப்பினர்களது கருத்துரு மற்றும் முடிவிற்கு விடப்பட வேண்டும்.

**மாவட்ட அளவிலான உயர்மட்டக் குழுவின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்:**

- மாவட்ட அளவிலான உயர்மட்டக்குழு ஒரு சட்டரீதியில்லாத (Non Statutory) குழு ஆகும். இக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று மாதத்தில் ஒரு முறையாவது நகராட்சி தணிக்கைத் தடை நிலுவை தீர்க்க கூட்டப்பட வேண்டும்.
- நகராட்சி ஆணையரை மேல் விசாரணைக்காக அழைத்தல், குழுவிற்குள் கூடுதல் விளக்கங்கள் ஏதேனும் பெறவேண்டி இருக்குமேயானால் அதனை பெறுதல்
- முறைகேடுகள் பற்றிய அறிக்கையினை குழுவிற்குள் வைத்து விாவாக பரிசீலனை செய்தல்
- நிதி இழப்புக்குப் பொறுப்பான நகராட்சி ஆணையர் மற்றும் இதர பணியாளர்களிடையே அந்த நிதி இழப்பீட்டுத் தொகையினை முழுவதுமாகவோ அல்லது பகிர்ந்தே பிடித்தம் செய்தல்
- அதிகமாக தொகை அளிக்கப்பட்ட ஒவ்வொரு நிகழ்வினையும் ஆராய்ந்து தகுதியுள்ள நிகழ்வுகளில் பணம் திரும்ப பெறுவதை முழுவதுமாக கைவிடுதல்
- ஒவ்வொரு முறைகேடுகளையும் அதன் தன்மைக்கேற்ப அதனை பொருட்படுத்தாது விடுதல்
- எந்த ஒரு தணிக்கை தடைக்காவது அரசு அளவில் பிழை பொறத்தல் ஆணைப் பெறப்படல் வேண்டுமெனில் அத்தகைய நிகழ்வினை அரசுக்கு பரிந்துரைத்தல்
- இக்குழு பரிந்துரைத்துள்ளவைகள் மற்றும் தணிக்கையில் குறிப்பிடப்பட்ட ஆலோசகனைகள் ஆகியவை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தல்
- நகராட்சி ஆணையர்களால் செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் சுட்டிக் காட்டப்பட்ட அனைத்துத் தணிக்கைத் தடைகளை பரிசிலித்தல்
- மாநிலக் கணக்காயர் எழுப்பிய தடைகள் மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையினரால் விசாரணையில் உள்ள நிகழ்வுகளை இக்குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாமல் விட்டு விடுதல்

2. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 3026/நநி (ம) கு.வ./07 நாள். 16.4.2007 இன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ஆறுநரின் ஆணைப்படி/

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநர்,சென்னை108
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து நகராட்சி ஆணையர் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)

சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை–5
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) சென்னை–1
இயக்குநர் கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–35
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18
மாநில தலைமைக் கணக்காயர் (தணிக்கை) சென்னை–18
நகல்
நிதி (நநி(ம)குவ)த்துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஂஃகல்(பொது/வ.செ/பேரூ.1)துறை, சென்னை–9
அமைச்சர் (நிதி/ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை)
இருப்புக்கோப்பு / உதிரி நகல்/

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்